# ஐஐடி-யில் 'ஆன்மிகம், அறிவியல் ஆராய்ச்சி மையம்'

**சென்னை, மார்ச் 26:** ஆன்மிகம், தியானம், அறிவியல், சமூகம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புகளை ஆராய்வதற்காக மேம்பட்ட ஆராய்ச்சிக்கான மையம் தனியார் பங்களிப்புடன் சென்னை ஐஐடியில் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை ஐஐடி முன்னாள் மாணவரான சந்த் ராஜிந்தர் சிங் மகராஜ், சர்வதேச அளவிலான ஆன்மிக அமைப்பை நடத்தி வருகிறார். இந்தியாவில் 'சாவன் கிருபால் ருஹானி மிஷன்' என்ற பெயரில் செயல்படும் அவரது அமைப்பு, சென்னை ஐஐடியில் ஆன்மிகம், அறிவியல், சமூகம் குறித்த மேம்பட்ட ஆராய்ச்சி மையம் தொடங்க ரூ.5 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

இந்த மையத்தின் தொடக்க விழாவில் பேசிய சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி, 'ஆன்மிக அறிவியலையும் சமூகத்தில் அதன் தாக்கத்தையும் இந்த மையம் ஆய்வு செய்வதுடன், பொதுமக்களுடனான ஈடுபாட்டு முயற்சிகளையும் உருவாக்கும்' என்றார்.

நிகழ்வில், சந்த் ராஜேந்தர் சிங் மகாராஜ், ஆன்மிக அறிவியல் மையத்தின் தலைமைப் பொறுப்பாளர் மாதா ரீட்டா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 8 லட்சம் டன் எல்பிஜி-க்கு ஏற்பாடு

'நாட்டில் எல்பிஜி சமையல் எரிவாயு விநியோகத்திலும் எந்தத் தட்டுப்பாடும் இல்லை. தினசரி உள்நாட்டு உற்பத்தி 40 சதவீதம் உயர்த்தப்பட்டு, 50,000 டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் தினசரி தேவையில் (80,000 டன்) 60 சதவீதத்துக்கும் அதிகமானதாகும். தினசரி இறக்குமதி தேவை 30,000 டன்கள் மட்டுமே.

உள்நாட்டு உற்பத்தி உயர்வுடன், 8 லட்சம் டன் எல்பிஜி இறக்குமதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா, ரஷியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியாவில் உள்ள 22 எல்பிஜி முனையங்களுக்கு இவை வந்தடைந்து கொண்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளால் ஒரு முழு மாதத்துக்குத் தேவையான எல்பிஜி விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எண்ணெய் நிறுவனங்கள் தினமும் 50 லட்சத்துக்கும் மேல் எல்பிஜி சிலிண்டர்களை வெற்றிகரமாக விநியோகித்து வருகின்றன. மக்களிடையே ஏற்பட்ட பீதியால் 89 லட்சமாக அதிகரித்த எல்பிஜி முன்பதிவு, இப்போது மீண்டும் 50 லட்சமாக குறைந்துள்ளது' என்று மத்திய அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள்தொகை கணக்கெடுப்பு: முறையற்ற கேள்விகளை எழுப்பும் அலுவலருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை

## இந்திய பதிவுத் துறைத் தலைவர் சுற்றறிக்கை

**புது தில்லி, மார்ச் 26:** '2027 மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய வகையில் முறையற்ற கேள்விகளை எழுப்பும் அலுவலருக்கு அதிகபட்சமாக 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்' என்று இந்திய பதிவுத் துறைத் தலைவர் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக இந்திய பதிவுத் துறைத் தலைவரும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆணையருமான மிருத்யுஞ்ஜயகுமார் நாராயண் சார்பில் அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியின்போது உள்நோக்கத்துடன் மக்களின் மனதைப் புண்படுத்தக் கூடிய வகையில் முறையற்ற கேள்விகளை எழுப்பினாலோ அல்லது அறிந்தே ஏதாவது தவறான அறிக்கையை சமர்ப்பித்தாலோ அல்லது கணக்கெடுப்பின் போது பெறப்பட்ட தகவல்களை மத்திய அரசு அல்லது மாநில அரசின் முன் அனுமதி இன்றி வெளியிட்டாலோ மக்கள்தொகை கணக்கெடுப்பு சட்டப் பிரிவு 11-இன் கீழ் ரூ. 1,000 அபராதம் முதல் அதிபட்சமாக 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனை விதிக்கப்படும்.

மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் முறையாக ஈடுபடாமலும் அரசு உத்தரவுகளைப் பின்பற்றாமலும் அல்லது மற்ற அலுவலர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படும் அலுவலர்களுக்கும் அதே தண்டனை விதிக்கப்படும்.

மேலும், சேகரிக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகளை சேதப்படுத்துகிற வகையில் அல்லது அழிக்கின்ற வகையில் நடந்துகொள்ளும் அல்லது மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிவுகளைத் திரித்தல் அல்லது சிதைக்கின்ற வகையில் செயல்படும் ஊழியர்களுக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வரும் 2027-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. முதன்முறையாக எண்ம முறையில் நடத்தப்படும் இந்த கணக்கெடுப்பில், மக்களின் ஜாதிவாரி விவரங்களும் சேகரிக்கப்பட உள்ளன. இந்தப் பணிக்காக ரூ. 11,718 கோடி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பு கடந்த 2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கரோனா பாதிப்பு காரணமாக கணக்கெடுப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

### பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மேம்பாடு தொடர்பாக

# ஐஐடி அறக்கட்டளை- ராணுவம் ஒப்பந்தம்

**சென்னை**

பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மேம்பாடு தொடர்பாக, சென்னை ஐஐடி அறக்கட்டளையுடன், இந்திய ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

பாதுகாப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது, ராணுவத் தொழில்நுட்பங்களில் வெளிநாடுகளை சார்ந்திருப்பதை குறைப்பது தொடர்பாக, சென்னை ஐஐடி பிரவர்தக் டெக்னாலஜீஸ் அறக்கட்டளையுடன், இந்திய ராணுவத்தின் எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பிரிவு நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. பிரவர்தக் அறக்கட்டளையின் தலைமைச் செயல் அலுவலர் எம்.ஜெ.ஷங்கர் ராமன், இந்திய ராணுவத்தின் இஎம்இ பிரிவு கமாண்டிங் அதிகாரி மேஜர் ஜெனரல் லலித் கபூர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, ஆவடியில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் குறித்து மேஜர் ஜெனரல் லலித் கபூர் கூறும்போது, “ஐஐடி பிரவர்தக் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் ராணுவத்தின் இஎம்இ பிரிவு, ராணுவ நடவடிக்கைகளையும், ஆயுதங்களின் தரத்தையும் மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதன்மூலம், பாதுகாப்பு தொழில்நுட்பங்களுக்கு வெளிநாடுகளைச் சார்ந்துள்ளதை கணிசமாக குறைக்க முடியும்” என்றார்.

ஐஐடி பிரவர்தக் அறக்கட்டளையின் வியூக ஆலோசகரும், தென்பிராந்திய ராணுவத்தின் முன்னாள் கமாண்டிங் அதிகாரியுமான லெப்டினென்ட் ஜெனரல் கரன் சிங் பிரார் கூறும்போது, “இந்த கூட்டு முயற்சி மூலம் கல்வி நிறுவனம் மற்றும் ராணுவத்தின் திறமைகளை ஒருங்கே பயன்படுத்த முடியும்” என்றார்.

### கியூ.எஸ். உலகளாவிய தர வரிசை வெளியீடு

# பொறியியல் - தொழில்நுட்பத்தில் விஐடி பல்கலைக்கழகத்துக்கு 119-ம் இடம்

**வேலூர்**

கியூ.எஸ். உலகளாவிய பல்கலைக்கழகங்களின் பாடப்பிரிவு தரவரிசை பட்டியலில், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் விஐடி பல்கலைக்கழகம் உலகளவில் 119-ம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலகளாவிய உயர்கல்வி பகுப்பாய்வு நிறுவனமான ‘கியூ.எஸ்.’(குவாக்கரெல்லி சைமண்ட்ஸ்) 2026-ம் ஆண்டுக்கான உலக பல்கலைக்கழக பாடப் பிரிவு தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் வேலூர் விஐடி பல்கலைக்கழகம் 17 பாடப்பிரிவுகளில் உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தேர்வாகி உள்ளது. இதுகுறித்து விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் கூறியதாவது:

கியூ.எஸ். உலக பல்கலைக்கழகங்களின் பாடப்பிரிவு தரவரிசைப் பட்டியலில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் விஐடி பல்கலைக்கழகம் கடந்த ஆண்டை விட23 இடங்கள் முன்னேறி உலகளவில் 119-ம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது. இந்திய அளவிலான தரவரிசையில் 6-ம் இடம்.

இதில், கம்ப்யூட்டர் சயின்ஸ் அண்ட் இன்பர்மேஷன் சிஸ்டம்ஸ் பாட பிரிவில் 86-வது இடமும், எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ் பாட பிரிவில் 87-வது இடமும் என 100 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளது. அதேபோல், கணிதவியலில் 104-வது இடமும், தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு பாடத்தில் 101-200, மெட்டீரியல் சயின்ஸ் 137-வது இடமும் பிடித்துள்ளது.

மெக்கானிக்கல், ஏரோநாட்டிகல் அண்ட் மேனுபேக்சரிங் பிரிவில் 148-வது இடமும் என 200 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன. கம்ப்யூட்டர் சயின்ஸ் அண்ட் இன்பர்மேஷன் சிஸ்டம்ஸ் மற்றும் எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ் பிரிவுகளில் 6-வது இடமும், தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு பிரிவில் 7-வது இடத்தையும் பிடித்துள்ளன.

ஆர்ட் அண்ட் மற்றும் டிசைன் 201-300, சிவில் என்ஜினீயரிங் பிரிவில் 201-275-ம் இடம் பிடித்துள்ளது. கெமிக்கல் பாட பிரிவில் 201-250, வேதியியல் மற்றும் இயற்பியல், வானியல் பாட பிரிவுகளில் 251-300 தர வரிசையும், புள்ளியியல், செயல்பாட்டு ஆராய்ச்சியில் 251-275, பயாலாஜிகல் சயின்சஸ் 301-350, சுற்றுச்சூழல் அறிவியல் 351-400, மருத்துவ பாட பிரிவில் 551-600 தரவரிசையில் இடங்களை பிடித்துள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

### ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் செல்ல

# இந்தியா உட்பட 5 நாடுகளுக்கு அனுமதி

**போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்யவில்லை என ஈரான் குற்றச்சாட்டு**




டெஹ்ரான்/ வாஷிங்டன்

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியா, சீனா, ரஷ்யா உட்பட 5 நட்பு நாடுகளின் சரக்கு கப்பல்கள் செல்ல ஈரான் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கிடையே, போர் நிறுத்தம் ஏற்படுத்த ட்ரம்ப் அறிவித்த 15 அம்ச திட்டம் நியாயமற்றது. பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்யவில்லை என்று ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்.28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கச்சா எண்ணெய், எல்பிஜி எரிபொருள் கொண்டு செல்லும் கப்பல்கள் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. ஒரு சில கப்பல்கள் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இதனால் நூற்றுக்கணக்கான சரக்கு கப்பல்கள் அங்கு காத்துக் கிடந்தன.

இந்திய கப்பல்களுக்கு அனுமதி வழங்கும்படி ஈரான் அரசுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. இதேபோல, ஈரானின் நட்பு நாடுகளும் பேச்சு நடத்தின. இதையடுத்து இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா மற்றும் ஈராக் ஆகிய நட்பு நாடுகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்ல ஈரான் அனுமதி வழங்கியுள்ளது. இதுகுறித்து ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி கூறும்போது, "ஈரான் போர் சூழலில் உள்ளது. மேற்கு ஆசியா போர்க்களமாக உள்ளது. இதனால், இங்கு எதிரி நாடுகளின் கப்பல்கள் செல்ல அனுமதிக்க முடியாது. மற்றவர்களுக்கு ஹார்முஸ் ஜலசந்தி திறந்தே உள்ளது" என்றார்.

**'உச்ச தலைவராக நியமிக்க ஆசை'**

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் ஆளும் குடியரசுக் கட்சி சார்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் அதிபர் ட்ரம்ப் கூறியதாவது:

அமெரிக்கா - ஈரான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. ஈரானின் உச்ச தலைவராக என்னை நியமிக்க அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

அமெரிக்க பிரதிநிதிகளுடன் ஈரான் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். அமெரிக்காவுடன் வெகுவிரைவாக அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த ஈரான் விரும்புகிறது. ஆனால், ஈரான் பிரதிநிதிகளால் இதை வெளிப்படையாக கூற முடியவில்லை.


ட்ரம்ப்

ஈரான் ஆட்சியாளர்கள், ராணுவ தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டு வருகின்றனர். உயிர்பயம் காரணமாக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்ய ஈரான் பிரதிநிதிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் இதை பகிரங்கமாக அறிவித்தால் சொந்த நாட்டு மக்கள் அடித்துக் கொன்றுவிடுவார்கள் என்று அஞ்சுகின்றனர். ஒருவேளை, ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து, போரை நிறுத்த ஈரான் மறுத்தால் அந்த நாடு நரகமாக மாறும்.

இவ்வாறு ட்ரம்ப் கூறினார்.

போரை நீண்ட காலம் நீட்டிக்க ட்ரம்ப் விரும்பவில்லை. அடுத்த சில வாரங்களில் போர் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே, 5 நாட்கள் போர் நிறுத்தம் அமலில் இருக்கும் என்று ட்ரம்ப் கடந்த 23-ம் தேதி அறிவித்தார். போரை முடிவுக்கு கொண்டு வர, 15 அம்ச திட்டத்தையும் அறிவித்தார்.

இந்நிலையில், இந்த திட்டம் ஒருதலைப்பட்சமானது என்று ஈரான் குற்றம்சாட்டியுள்ளது. இதுகுறித்து ஈரானின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:

அமெரிக்காவின் 15 அம்ச போர் நிறுத்த திட்டம் பாகிஸ்தான் மூலம் தெரிவிக்கப்பட்டது. இதை ஈரான் ஆய்வு செய்தது. ஈரான் தனது பாதுகாப்பு திறனை கைவிட வேண்டும் என்ற அமெரிக்காவின் போர் நிறுத்த திட்டம் ஒருதலைப்பட்சமானது, நியாயமற்றது. இது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் நலனுக்குத்தான் உதவும்.

ஈரான் - அமெரிக்கா இடையே சமரசம் செய்யும் முயற்சியில் துருக்கி, பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளன. நியாயமான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா முன்வர வேண்டும். ஆனால், முறையான பேச்சுவார்த்தைக்கு எந்த ஏற்பாடும் செய்யவில்லை" என்றார்.

"தோல்வியை ஈரான் ஏற்க வேண்டும் இல்லாவிட்டால், இன்னும் கடுமையாக தாக்கப்படும்" என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை நிர்வகித்த ஈரான் தளபதி அலிரேசா உயிரிழப்பு



டெஹ்ரான்: ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை நிர்வகித்த ஈரான் கடற்படைத் தளபதி அலிரேசா, இஸ்ரேல் விமானப் படை தாக்குதலில் உயிரிழந்தார்.

அமெரிக்கா - ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் மூடியிருக்கிறது. இதனால், உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எல்பிஜி காஸூக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஈரான் கடற்படை தளபதி அலிரேசா டாங்கிரி, ஹார்முஸ் ஜலசந்தி பகுதியின் பொறுப்பாளராக செயல்பட்டு வந்தார். சர்வதேச கடல் போக்குவரத்தை தடுத்து நிறுத்திய குற்றத்துக்காக அவரை சர்வதேச தீவிரவாதியாக அமெரிக்க அரசு அறிவித்திருந்தது.

இந்த சூழலில், ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுக நகரின் பல்வேறு பகுதிகளை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று குண்டுகளை வீசின. இதில், அலிரேசா டாங்கிரி உயிரிழந்தார். ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய் கப்பல் போக்குவரத்தை முடக்கியதற்காக அவர் கொலை செய்யப்பட்டார் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. எனினும், அவரது உயிரிழப்பை ஈரான் ராணுவம் உறுதி செய்யவில்லை.

